www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

TTK

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

11 - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 45

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** 7 X 1 = 7

1. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

2. "Bug" என்ற சொல்லின் தமிழாக்கம்

அ) அரசிதழ் ஆ) நலகை இ) பிழை ஈ) சுற்றறிக்கை

3. "ஜனப்பிரளயம்" என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

4. "அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்" - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

6. "நவையின்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்" - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்.

அ) உலகம் ஆ) விடுதலை இ) குற்றம் ஈ) சொல்லுதல்

7. தேவாரத்தில் .................... பண்களில் பாடல்கள் உள்ளன.

அ) 27 ஆ) 23 இ) 28 ஈ) 30

**II எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்க.** 5 X 2 = 10

8. இந்தியக் கட்டக்கலையின் மூன்று வகைகள் யாவை?
9. சாழல் என்றால் என்ன?
10. "பயமில்லை" - புணர்ச்சி விதி.
11. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை யாவை?
12. அலைக்கடல், புதுக்கியவர் - இலக்கணக்குறிப்பு.
13. ஃப்ரெஸ்கோ ஓவியம் என்றால் என்ன?

**III எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.** 3 X 4 = 12

14. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?
15. சிங்கிப் பெற்ற பரிசப் பொருள்களாகக் குறவஞ்சி கூறுவன யாவை?
16. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
17. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**IV எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்க.** 2 X 6 = 12

18. கல்லும் கலை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

19. பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

20. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

**V அடிமாறாமல் எழுதுக.** 1 X 4 = 4

21. "சிற்றூரும் .......... " எனத்தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com